**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No. 88/2022 தேதி- 15.09.2025

(P.W.2) - அம்ரோஸ்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு பட்டிகை சொத்தும் என்னுடைய சொத்தும் கண்ணனுரர் கிராமத்திற்குட்பட்ட புல எண் 404/8 எ என்றால் சரிதான். வாதியின் நிலமும் என்னுடைய நிலமும் உட்பிரிவு செய்யாமல் தனித்தனியாக இருக்கிறது என்றால் உட்பிரிவு செய்யப்படாமல்தான் இருக்கிறது. வாதியின் சொத்திற்கு கிழக்கு பகுதியில் ஒரு வாய்க்கால் இருக்கிறது என்றால் சரியல்ல. வாதியின் சொத்திற்கு எந்த பக்கம் குளம் இருக்கிறது என்றால் எந்த பகுதியிலும் குளம் இல்லை. வாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் புதுப்புல எண் 404/9 இருக்கிறது என்றால் 404/8 எ தான் இருக்கிறது.

புல எண் 404/9 ல் 5.50 ஹக்டேர் பரப்பளவு கொண்ட குளம் மற்றும் அதன் தரைப்பகுதி உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி குளம் அரசுக்கு உரிமையானது அது 2 ஆம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருக்கிறது என்றால் சரியல்ல. புதுப்புல எண் 404/9 ல் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி புல எண் 404/8 எ யில்தான் ரப்பர் மரம் நட்டு பராமரித்து வருகிறார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். குளத்தின் கரையை வாதி, பாபு, பால்ராஜ் மற்றும் ரெபேக்கா ஆகியோர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளார்கள் என்றால் அவ்வாறு எதுவும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

வருவாய்த்துறை அலுவலர்கள் தாலுக் அளவீட்டாளர்கள் மூலம் அளவீடு செய்யப்பட்டு மேற்படி நபர்களின் ஆக்கிரமிப்பு திட்டப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்குத் தெரியாது. வாதி உட்பட மற்ற நபர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு வாதியால் கைப்பற்றப்பட்டது என்கிற விபரம் தெரியுமா என்றால் அறிவிப்பு அனுப்பவும் இல்லை அது கிடைக்கவும் இல்லை. வாதிக்கு அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு நேடியாக தெரியுமா என்றால் தெரியாது. வாதி அந்த அறிவிப்பை கைப்பற்றிய விபரத்தையும் என்னால் கூறமுடியாது என்றால் சரிதான்.

அரசு நிலத்தில் இருந்த மரங்கள் முறையாக ஏலம் விடப்பட்டது என்றால் இன்றுகூட ரப்பர் மரத்திலிருந்து பால்எடுத்துவிட்டுதான் இங்கு வந்தேன். வாதி அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி

செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.